முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.8.2025) தலைமைச் செயலகத்தில், சென்னை, தரமணியில் உள்ள தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் 5.10 கோடி ரூபாய் செலவில் முழு அளவில் புனரமைக்கப்பட்ட குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புத்தளத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் தலைவர் டிராட்ஸ்கி மருது, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் (பொறுப்பு) மு. மேகவர்ணம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.8.2025) கொளத்தூர், பெரியார் நகர் பேருந்து நிலையத்தில், மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் ரூ.104,43 கோடி மதிப்பீட்டிலான புதிய 248 BSVI மகளிர் விடியல் பயண பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர், பி.கே. சேகர்டாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, கலாநிதி வீராசாமி எம்.பி., இரா.கிரிராஜன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றியழகன், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ்குமார், ரங்கநாதன், கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காசர்லா உஷா, போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் கன்சோங்கம் ஜடக் சிரு, முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ். மாநகர போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

முதல்வரின் காலை உணவுத் திட்டம் - பொதுமக்களிடமும், குழந்தைகள், பெற்றோர்களிடமும், நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது!

குழந்தைகளின் கல்வி கற்கும் திறன் வளர்ந்துள்ளது!

முதல்வர் இன்று தொடங்கி வைக்கும் திட்டத்தில் - 3 லட்சத்து 6 ஆயிரம் குழந்தைகள் பயன்!

கூடுதல் தலைமைச் செயலாளர் பி.அமுதா ஐ.ஏ.எஸ். பேட்டி!

சென்னை, ஆக.26- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்படவுள்ள "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" விரிவாக்கம் குறித்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஊடகச் செயலாளர் திருமதி பி. அமுதா, சென்னை, தலைமைச் செயலகம், பிரதானக் கட்டடம், இரண்டாம் தளத்தில் உள்ள கூட்ட அரங்கில் நேற்று (25.08.2025) பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேட்டியளித்தார். அப்போது

அவர் கூறியதாவது:-

முதலமைச்சர் அவர்கள் நாளை (இன்று) முதல மைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைக்க உள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள், சென்னை, மயிலாப்பூர் புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் இந்தத் திட்டத்தை துவக்கி வைக்கிறார்.

நாளை அனைத்து நகரப்புறங்களிலும் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் இந்த முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கப்பட இருக்கிறது. அந்தந்த மாவட்டங்களில் உள்ள அமைச்சர்கள் இந்தத் திட்டத்தினை தொடங்கி வைக்க உள்ளார்கள். மொத்தம் 2 ஆயிரத்து 429 பள்ளிகளில், இந்தத் திட்டம் நாளைக்கு தொடங்கப்பட உள்ளது. இதன் மூலம் 3 இலட்சத்து 6 ஆயிரம் குழந்தைகள் பயன்பெற உள்ளார்கள். இது 5வது கட்டம். இது வரை நான்கு கட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 110 விதியின் கீழ் 07.05.2022 அன்று காலை உணவு திட்டம் குழந்தைகளுக்கு தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள்.

செப்டம்பர் 15, 2022 அன்று மதுரை மாவட்டத்திலுள்ள ஆதிமூலம் தொடக்கப் பள்ளியில் Pilot phase முன்னோட்டமாகத் தொடங்கப்பட்டது. அந்த Pilot phaseல் 1,545 பள்ளிகளுக்கு இந்த திட்டங்கள் பரிச்சார்த்த முறையில் தொடங்கப்பட்டது.

Pilot phaseல் நகராட்சிகளில் உள்ள சில பள்ளிகள் - மாநகராட்சிகளில் உள்ள சில பள்ளிகள் - கிராமப்புறங்களில் உள்ள சில பள்ளிகள் - மலைப் பகுதிகளில் உள்ள பள்ளிகள் இப்படி இவைகள் எல்லாவற்றையும் உள்ளடக்கியது இந்த Pilot phase. ஆகவே, 1,545 பள்ளிகளுக்கு இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இது நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டது என்று கண்டறிந்த பிறகு விரிவாக்கம்2 எடுத்தோம்.

விரிவாக்கம் 2ல் (Phase2), மாநகராட்சி மற்றும் நகராட்சி பள்ளிகளில் அரசு தொடக்கப்பள்ளிகளில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 01.03.2023 அன்று அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. பள்ளிகளின் எண்ணிக்கை 433 பள்ளிகள் - பயன்பெற்ற 56,160 பள்ளிக் குழந்தைகள் இந்த விரிவாக்கம் 2ல் பயன்பெற்றிருக்கிறார்கள்.

25.8.2023ல் மூன்றாவது கட்டம் (Phase3) செயல்படுத்தப்பட்டது. அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் இந்தத் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டது. இதன் மூலமாக, கட்டம்1, கட்டம்2, கட்டம்3 என்று இந்த மூன்றை கட்டத்தையும் சேர்த்து மொத்தம் 30 ஆயிரத்து 992 பள்ளிகள் இந்தத் திட்டத்தில் இணைக்கப்பட்டு 15.32 லட்சம் குழந்தைகள் பயன் பெற்றிருக்கிறார்கள்.

விரிவாக்கம் நான்கில் (Phase4), கிராமப்புறங்களில், ஊரகப் பகுதிகளில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளிகளில், கடந்த ஆண்டு 15.07.2024 அன்று இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அந்தத் திட்டத்தில் மட்டும் 3 ஆயிரத்து 995 பள்ளிகள் 2.21 லட்சம் குழந்தைகள் பயன் பெற்றனர். ஆக மொத்தம் நான்கு கட்டங்களில் இது வரை 34 ஆயிரத்து 987 பள்ளிகள் இந்த திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு இதுவரை 17 லட்சத்து 53 ஆயிரத்து 257 குழந்தைகள் பயன் பெற்றுள்ளனர்.

இந்தத் திட்டமானது குறிப்பாக, பொதுமக்களிடமும், குழந்தைகளிடமும், ஆசிரியர்களிடமும், தாய்மார்களிடமும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

இது எப்படி எங்களுக்குத் தெரிய வந்தது என்றால், இரண்டு studies செய்தோம். அரசுத் துறையான மாநிலத் திட்டக் குழுவின் (State Planning Commission) மூலமாக ஒரு ஆய்வு செய்யப்பட்டது. அதேபோல, Department of Evaluation Applied Research என்ற அரசாங்கத் துறையின் மூலமாகவும், ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

அதுமட்டுமல்லாமல், ஒரு தனியார் தொண்டு நிறுவனம் (Evedensia) மூலமாகவும் ஆராய்ச்சி செய்யப்பட்டது. இந்தக் குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் குழந்தைகளுக்கு என்னென்ன வகையில் பயன் பெற்றிருக்கிறார்கள்? அனைத்து பள்ளிக் கூடங்களிலும் 8.30 மணிக்கு குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கப்பட்டு விடுகிறது - அதனால், அந்த நேரத்திற்குள் வந்து விடுகிறார்கள். நேரம் தவறாமை (Punctuality), வருகைப் பதிவேடு (Attendance) மேம்படுத்தப்பட்டிருக்கிறது குழந்தைகள் சுறுசுறுப்பாக வகுப்பில் பதில் சொல்கிறார்கள் - குழந்தைகள் ஆரோக்கியமாகத் தென்படுகிறார்கள் என்று studiesல் தெரிய வந்திருக்கிறது. ஆசிரியர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், குழந்தைகள் மிக கவனமாக வகுப்பை கவனிக்கிறார்கள். அவர்களுடைய Attendance plan உருவாக்கியிருக்கிறது என்று சொல்கிறார்கள்.

அதேபோல, நன்றாகக் குழந்தைகள் சாப்பிடுவதால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக இருக்கிறது - அவர்களுடைய ஆரோக்கியமும் (improve) செம்மைப்படுத்தப்பட்டிருக்கிறது என்று Health parametersல் studies சொல்லியிருக்கிறது.

குழந்தைகளுக்கு பள்ளிக் கூடங்களில் ஆரோக்கியமான சாப்பாடு தரப்படுகிறது - இங்கே என்னென்ன தருகிறார்கள் என்று உங்களுக்குத் தெரியும் - பொங்கல் வகைகள், கிச்சடி, உப்புமா (அரிசி, ரவை, கோதுமை, சேமியா) இதெல்லாம் சேர்ந்த (ingredients) ஒவ்வொரு நாளைக்கும் ஒரு மெனு போடப்பட்டிருக்கிறது. அந்த மெனுவின்படி அந்தக் குழந்தைகளுக்கு காலை உணவு தருகிறோம். அந்த உணவோடு சேர்த்து காய்கறிகளையும் சேர்த்துத் தருகிறோம். ஆதலால், சூடாகவும், காய்கறிகளுடனும் தருவதால் மிகவும் ஆரோக்கியமாக இருக்கிறது - வீட்டிற்கும் சென்று குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுகிறார்கள் - முன்பெல்லாம், கிச்சடி, உப்புமா போன்றவை சாப்பிடுவதற்கு அவ்வளவு ஆர்வம் இருக்காது. ஆனால் இப்போது இங்கே நன்றாக சமைத்துத் தருவதால், ஆரோக்கியமான உணவுகளைக் கேட்டு வாங்கிச் சாப்பிடுகிறார்கள் என்று ஆராய்ச்சியில் தெரியவந்திருக்கிறது.

தாய்மார்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், குறிப்பாக வேலைக்குப் போகின்ற பெண்கள் குழந்தைகளுக்கு ஒழுங்காக சமைத்துக் கொடுக்க முடியவில்லை என்ற மனக்குறை இருக்கிறது என்றும், அவசர அவசரமாக சாப்பிட குழந்தைகளுக்கு கையில் இருப்பதை கொடுத்துவிட்டுப் போய்விடுவதாகவும் சொல்கிறார்கள். இப்போது என்ன உணர்கிறார்கள் என்றால், நாங்கள் குழந்தைகளை தயார் செய்து அனுப்பி வைத்தால் போதும் - பள்ளிகளிலேயே காலை உணவு கொடுப்பதால் எங்களுக்கு நேரம் மிச்சமாகிறது என்றும், எங்களுக்கு வேலைப்பளுவும் கொஞ்சம் குறைந்திருப்பதால் மிகவும் சந்தோஷமாக இருக்கிறது என்றும் தாய்மார்கள் சொல்லி இருக்கிறார்கள்.

மற்றொரு விஷயம் குழந்தைகள் நல்ல பழக்கவழக்கங்களைப் பழகி இருக்கிறார்கள் கைகளை கழுவி விட்டுதான் சாப்பிடுகிறார்கள். அனைத்துக் குழந்தைகளும் வரிசையில் நின்று சோப் போட்டு கை கழுவி விட்டுதான் அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுகிறார்கள். கை கழுவும் பழக்கத்தை இந்தத் திட்டத்தின் மூலமாக நடைமுறைப்படுத்தி இருக்கிறோம்.

நகரப் புறங்களிலும், மாநகராட்சிப் பகுதிகளிலும் இந்த சாப்பாடு (Centralised Kitchen) மைய சமையலறையின் மூலமாகத் தயாரிக்கப்பட்டு வேன்கள் மூலமாக அந்தந்த பள்ளிகளுக்கு வழங்கப்படுகிறது. இதேபோல, ஊரகப் பகுதிகளிலும், பேரூராட்சிகளிலும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக வழங்கப்படுகிறது. மேலும், அங்கு குழந்தைகளின் அம்மாக்களும் இருக்கிறார்கள்.

முக்கியமான விஷயம் என்னவென்றால், எந்தக் குழந்தையின் தாய்மார்கள் சமையலறையில் சமைத்து வைத்திருக்கின்றோமோ, அந்தக் குழந்தை பள்ளியில் படிக்கவேண்டும். அப்போதுதான் இன்னும் அக்கறையாகவும், ஆர்வமாகவும் அவர்கள் சமைக்கிறார்கள். ஆராய்ச்சியின்படி, அந்தக் குழந்தைகள் படிக்கும் பள்ளியில் அவர்களின் தாய்மார்களுக்கு சமையல் பணியை வழங்கியிருப்பதால், அவர்கள் முழு ஈடுபாட்டுடன் இந்த பணிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். இது நமக்கு ஒரு கூடுதல் பயனளிக்கக்கூடியது.

மேலும், குழந்தைளிடம் கேட்டபோது, வழங்குகின்ற உணவுகள் நன்றாக இருக்கிறதா? திருப்தியாக இருக்கிறதா? அவைகள் போதுமானதாக இருக்கிறதா? என்று கேட்டதற்கு, குழந்தைகள், எங்களுக்கு வயிறு நிறைய அவர்கள் கொடுக்கிறார்கள் போதுமானதாக இருக்கின்றது என்பதையும் நம்முடைய feedbackன் மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்டது. ஆதலால், குழந்தைகள் சந்தோஷமாக இருக்கிறார்கள் - ஆசிரியர்களும், குழந்தைகள் தினந்தோறும் வகுப்பிற்கு வருகிறார்கள் - வகுப்பிற்கு ஆர்வமாக வருகிறார்கள் - பெற்றோர்களுக்கும் அவர்களுடைய பளு குறைந்திருக்கிறது. நல்லபடியாக குழந்தைகள் சாப்பிடுகிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.

ஆதலால் இந்தத் திட்டம் ஒரு நல்ல வரவேற்பை பெற்றிருப்பதால், இந்த ஐந்தாவது கட்டம் நம்முடைய முதலமைச்சர் அவர்களால் சென்னை, மயிலாப்பூரில் உள்ள ஒரு பள்ளியில் திறக்கப்பட உள்ளது. நாளை மட்டும் அனைத்து நகரப்புற பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில் இந்த திட்டம் விரிவாக்கப்பட வுள்ளது.

பள்ளிகளின் எண்ணிக்கை 2,429 - 3 இலட்சத்து 6000 குழந்தைகள் பயன்பெற உள்ளார்கள்.

ஏன், ரத்து செய்யக் கூடாது?

சென்னை மாவட்டத்தில் 6 கட்சிகளுக்கு நோட்டீஸ்!

விளக்கம் அளிக்க தேர்தல் அதிகாரி உத்தரவு!

சென்னை, ஆக.26

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951 பிரிவு 29கி-ன் கீழ் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சி கீழ்க்கண்ட சலுகைகளை பெறுகிறது. அதாவது, வருமான வரி விலக்கு (பிரிவு 13 கி வருமான வரி சட்டம்). அங்கீகாரம் (தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீடு பத்தி 6), பொது தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீட்டில் முன்னுரிமை (தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீடு பத்தி 108). அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட சின்னங்கள், நட்சத்திர பிரசார நியமனம் ஆகிய சலுகைகளைப் பெறும்.

அத்துடன் பதிவு செய்யப்பட்ட கட்சியானது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951 பிரிவு 29கின் படி தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படும் தேர்தல்களில் வேட்பாளர்களை நியமனம் செய்ய வேண்டும். இதில் சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர் வரம்பிற்கு உட்பட்ட முகவரியில் உள்ள கீழ்கண்ட கட்சிகள் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

1.கோகுல மக்கள் கட்சி, பு.எண்.7, ப.எண்.3, வெங்கட்ராமன் தெரு, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

2.இந்தியன் லவ்வர்ஸ் பார்டி, எண்23, பிபிளாக், 2வது தெரு, பூபதி நகர், கோடம்பாக்கம், சென்னை - 600 024.

3.இந்தியன் மக்கள் கல்வி முன்னேற்ற கழகம்,எண்.3, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 600 017.

4. மக்கள் தேசிய கட்சி, 137, கக்கன் காலனி, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

5.மனிதநேய மக்கள் கட்சி, 3வது மாடி, வட மரக்காயர் தெரு, சென்னை - 600 001. 6.பெருந்தலைவர் மக்கள் கட்சி, NRD டவர்ஸ், முதல் அவென்யூ, அசோக்நகர், சென்னை 600 083.

ஆகிய பதிவு செய்யப்பட்டுள்ள கட்சிகள் கடந்த 2019-ஆம் ஆண்டு முதல் 6 ஆண்டுகளாக எந்த ஒரு தேர்தலிலும் வேட்பாளர்களை போட்டியிட நியமிக்க வில்லை என்பதற்காக இந்த தேர்தல் ஆணையம் சம்பந்தப்பட்ட கட்சிகளுக்கு காரணம் கேட்கும் குறிப்பாணை அனுப்பி, விசாரணை செய்து அறிக்கை அனுப்பி வைக்க தமிழ்நாடு தலைமை தேர்தல் அலுவலர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள கட்சிகளுக்கு சென்னை தலைமை தேர்தல் அலுவலர் மற்றும் அரசு செயலர் அவர்களின் கடிதம் எண் 6580/20251 பொது (தேர்தல் 3) துறை நாள் 12.08.2025ன் படி தங்கள் கட்சியின் பதிவினை ஏன் ரத்து செய்யக்கூடாது என்பதற்கான காரணத்தினை தலைமை தேர்தல் அலுவலர் அலுவலகத்தில் வரும் 26.08.2025ம் தேதியன்று நேரில் ஆஜராகி எழுத்துப்பூர்வமாக அளிக்க காரணம் கேட்கும் குறிப்பாணை சம்பந்தப்பட்ட கட்சிகளுக்கு சார்வு செய்யப்பட்டுள்ளது.

தலைமைச் செயலகத்தில் நேற்று (25.08.2025) ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து ஆராய்ந்திட அமைக்கப்பட்ட குழுவின் தலைவரும் கூடுதல் தலைமைச் செயலாளருமான ககன்தீப் சிங் பேடி, தலைமையில் ஓய்வூதியம் தொடர்பாக அரசுப் பணியாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் மூன்றாம் கட்ட கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஓய்வூதியக் குழுவின் உறுப்பினர் டாக்டர் கே.ஆர். சண்முகம், உறுப்பினர் செயலர் / நிதித்துறை துணைச் செயலாளர் (வரவு செலவு) பிரத்திக் தாயள், மற்றும் அரசுப் பணியாளர் சங்கங்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

முதல்வரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை சென்னை மயிலாப்பூரில் உள்ள புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் இன்று (26.8.2025) தொடங்கி வைக்க உள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். இத்திட்டத்தின் வாயிலாக 3.05 இலட்சம் மாணவ-மாணவியர்கள் தினசரி பயன்பெற உள்ளார்கள்.

இந்த மகத்தான திட்டம் குறித்து நேற்று முன்தினம் 'முரசொலி'யில், "கல்வியை வளர்க்கும் காலை உணவுத் திட்டம்" எனும் தலைப்பில் தீட்டியிருந்த "உங்களில் ஒருவன்" கடிதத்தில் இம்மகத் தான திட்டம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டிருந்ததாவது:-

நாளைய தலைமுறையின் இன்றைய வளர்ச்சியில் அக்கறை கொண்டு தாயுள்ளத்துடன் செயல்படும் திராவிட மாடல் அரசின் மகத்தான திட்டமான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தமிழ் நாட்டில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களையும் வளர்ச்சியையும் கருத்தில்கொண்டு, தெலங்கானா போன்ற அண்டை மாநிலங்களிலும் இதனைப் பின்பற்றுவதற்கான செயல்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதும், இங்கிலாந்து - கனடா - இலங்கை உள்ளிட்ட நாடுகளில் காலை உணவுத் திட்டம் பற்றி அறிவிக்கப்பட்டிருப்பதும், உலகக் கண்ணோட்டத்துடன் தமிழ்நாடு செயல்படுவதை உறுதி செய்கிறது.

உணவை அளித்து உயிரை வளர்க்கும் தமிழர் மரபில், குழந்தைகளுக்குக் காலை உணவு தந்து கல்வியை வளர்க்கும் முதன்மையான பணியை மேற்கொண்டிருக்கும் உங்களில் ஒருவனான என் தலைமையிலான நம்முடைய அரசு அடுத்தகட்டமாக காலை உணவுத் திட்டத்தை நகர்ப்புற பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்யவிருக்கிறது.

இந்த விரிவாக்கத்தின் மூலம் நகர்ப்புறம் சார்ந்த 2 ஆயிரத்து 429 பள்ளிகளில், ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் 3 இலட்சத்து 6 ஆயிரம் மாணவ - மாணவியர் பயன் பெறுவர்.

நாள்தோறும் திட்டங்கள், நலிவுற்றோர் ஏற்றம் காணும் செயல்பாடுகள், தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக்க வேண்டும் என்ற இலட்சிய நோக்கத்துடன் பயணிக்கும் திராவிட மாடல் அரசின் முத்திரைத் திட்டங்களில் ஒன்றான காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்யும்போதெல்லாம் பள்ளிக் குழந்தைகளின் வயிறு நிறைகிறது. அவர்களின் அறிவு வளர்கிறது. பெற்றோரின் மனதில் மகிழ்ச்சிப் புன்னகை மலர்கிறது. தமிழ்நாடு, பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது.

இவ்வாறு "உங்களில் ஒருவன்" கடிதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டிருந்தார்.

திருமதி. ரேணுகாதேவி மறைந்துவிட்டாலும்

குடும்பத்தினர் - உற்றார் - உறவினர் நெஞ்சங்களில் நீங்காமல் என்றென்றும் நிறைந்திருப்பார்!

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலுவுக்கு பிரதமர் மோடி எழுதிய இரங்கல் கடிதத்தில் உருக்கம்!

புதுடெல்லி, ஆக. 26 - கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு அவர்களின் துணைவியார் திருமதி ரேணுகா தேவி அம்மையார் அவர்கள் 19.8.2025 அன்று உடல்நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தினார். இந்த துயரச் செய்தியை அறிந்தவுடன் இந்திய பிரதமர் மோடி அவர்கள் தனது நெஞ்சார்ந்த இரங்கல்களையும் ஆறுதலையும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் மோடி அவர்கள் கழக மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர். பாலுவுக்கு 19.8.2025 அன்று எழுதிய கடிதத்தின் விவரம் வருமாறு:

திருமதி ரேணுகாதேவி பாலு அம்மையார் அவர்கள் மறைந்த செய்தி என்னுள் துக்கத்தையும் சோகத்தையும் வரவழைத்துள்ளது. இத்தகைய இழப்பு இட்டு நிரப்பமுடியாத வெற்றிடத்தை விட்டுச்செல்கிறது .

அவர் ஊட்டிய விழுமியங்கள் குடும்பத்தினரை தொடர்ந்து ஊக்குவிக்க வல்லது.

அவருடன் வாழ்ந்த நினைவுகள் இந்த இக்கட்டான சூழலில் இருந்து நீங்கள் விடுபடத் தேவையான வலிமையைத் தரும் என நான் நம்புகிறேன்.

திருமதி ரேணுகாதேவி பாலு அவர்கள் மறைந்துவிட்டாலும் குடும்பத்தினர், உற்றார் உறவினர் என அனைவரின் நெஞ்சங்களிலும் அவர் நீங்காமல் என்றென்றும் நிறைந்திருப்பார்.

எனது நெஞ்சார்ந்த இரங்கல்களையும் உணர்வுகளையும் தங்களுக்கும் குடும்பத்துக்கும் தெரிவித்துக் கொள்கிறேன் .

இந்த துயரமான இழப்பை எதிர்கொள்ளும் பலத்தையும் ஆற்றலையும் தாங்கள் பெற்றிட வேண்டுகிறேன்.

இவ்வாறு பிரதமர் மோடி அவர்கள் தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் - சாலவாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட , குண்ணவாக்கம், பாண்டவாக்கம், வெண்டிவாக்கம், படூர், அமராவதி பட்டினம், அருங்குன்றம், புலிப்பாக்கம், ஆகிய ஊராட்சிகளை சேர்ந்த, அ.தி.மு.க. - பா.ம.க. - த.வெ.க. உள்ளிட்ட காட்சிகளைச் சேர்ந்த 200 க்கும் மேற்பட்டோர் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் ஒன்றிய செயலாளர் டி.குமார், சிவராமன், சத்யா சக்திவேல், கோதண்டராமன்,வெங்கட்ராமன்,நந்தா, யோகானந்தம், முரளிதரன்,பாலமுருகன், விஷ்ணு,ரமேஷ், வெங்கடேசன், இளங்கோவன், மணி, வீரபாண்டி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.